**செய்தி வெளியீடு எண்: 176** **நாள் : 06.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் கொடி நாள் செய்தி – 6.12.2015

நமது இந்தியத் திருநாட்டினை காத்திடும் நற்பணியை ஆற்றி வரும் முப்படை வீரர்களின் அரும்பணியையும், தியாகத்தையும் போற்றி நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் படை வீரர் கொடி நாளாக அனுசரிக்கப்படுகிறது.

இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்திருக்கும் நமது இந்திய தேசத்தின் எல்லைகளைப் பாதுகாப்பதோடு, இயற்கைச் சீற்றங்களின் போது மக்களைக் காத்திடும் சேவையினை ஆற்றி வரும் நமது முப்படை வீரர்களின் குடும்ப நலன்களையும், முன்னாள் படைவீரர்களின் நலன்களையும் காப்பது நம் அனைவரின் கடமையாகும். இந்தச் சிறப்பான கடமையினை நிறைவேற்றிடும் வகையில், கொடிகள் விற்பனை மூலமும், நன்கொடைகள் மூலமும் திரட்டப்படும் நிதி, படை வீரர்களுடைய குடும்பத்தினரின் நல்வாழ்விற்கும், முன்னாள் படை வீரர்களின் மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

வீர தீரச் செயல்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்தமைக்கான விருது மற்றும் பதக்கம் பெறும் தமிழகத்தைச் சேர்ந்த படைவீரர்களுக்கு உயர்த்தப்பட்ட பணப் பயன்கள், கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களின் மாத தொகுப்பூதியத்தை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது, போர்க் கைம்பெண்கள் மற்றும் போரில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஊனமுற்ற படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண மானியத்தை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது, போரில் மரணமடைந்த படைவீரர்களின் வாரிசுதாரர்கள், போர்க் கைம்பெண்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வருடாந்திர பராமரிப்பு மானியத்தை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், படைப்பணியில் உயிர் நீத்தோரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம், பொது நேர கல்லூரி மற்றும் மாலை நேரக் கல்லூரிகளில் கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை, படைப்பணிக்கு ஒரே மகன் அல்லது மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் வெள்ளிப் பதக்கமும், படைப் பணிக்கு தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன் அல்லது மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும் வெள்ளிப் பதக்கமும் வழங்குவது போன்ற பல்வேறு நலத்திட்டங்களை முன்னாள் படைவீரர்களின் மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

முப்படைவீரர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்களின் நலனுக்கான கொடிநாள் நிதி திரட்டுவதிலும், அவர்களின் நலன் காத்திடுவதிலும் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. நமது தேச பக்தியினை வெளிப்படுத்திடும் வகையிலும், நமது முப்படை வீரர்களின் தன்னலமற்ற தியாகத்தினை போற்றிடும் வகையிலும் கொடிநாள் நிதிக்கு தமிழக மக்கள் அனைவரும் தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**